பக்கங்கள்: 09

காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 28 வியாழக்கிழமை 14.10.2021 கதிர் 206

வெள்ளைப்பூண்டு மோசடி;

# கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் பிணை

சதொச நிறுவனத்தின் வெள்ளைப்பூண்டு மோசடி குற்றச்சாட்டில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட ஐவருக்கும் பிணை வழங்கப்பட்டுள்ளது. ☞2

# அரச புலனாய்வு அச்சுறுத்தல்களால் நாட்டை விட்டு வெளியேற எத்தனிக்கின்றனர் தமிழ் இளைஞர்கள்

## கனேடியத் தூதுவரிடம் சிறிதரன் எம்.பி. எடுத்துரைப்பு

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)


தமிழ் இளைஞர்கள் அரச புலனாய்வு அச்சுறுத்தல்களால் நாட்டைவிட்டு வெளியேற எத்தனிக்கின்றார்கள் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இலங்கைக்கான கனேடியத் தூதுவரிடம் தெரிவித்தார்.

இலங்கைக்கான கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினான், நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரனை அவரது காரியாலயத்தில் இன்று சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினரால் தமிழர்கள் தற்போது அரச இயந்திரங்களால் நசுக்கப்படும் முறை தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டது.

தமிழர்கள் தமது உணர்வுபூர்வமான நினைவுகளை மேற்கொள்வதற்கு இப்போது இருக்கும் அரசு கொரோனாவைக் காரணம் காட்டி தடைகள் விதிப்பது தொடர்பாகவும், அதனை மீறி நினைவேந்தல்கள் இடம்பெற்றால் ☞2





## இராணுவச் சிப்பாய் சுட்டுப் படுகொலை!

காலி, ஹீனடிகல - பொல்துவ பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் பலியாகியுள்ளார்.

தலவெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 46 வயதுடையவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

இவர் வீதியால் பயணித்தபோது, வாகனமொன்றில் வந்த இனந்தெரியாத குழுவொன்று அவர் மீது துப்பாக்கிச்சூட்டை நடத்தியுள்ளனர். ☞2

## நீரில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

முல்லைத்தீவு மாவட்டம், கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட செம்மலைப் பகுதியில் நீரில் மூழ்கி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

செம்மலைப் பகுதியில் நீர்நிலை ஒன்றில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோதே அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான 35 வயதுடைய சிறீசங்கர் என்று தெரியவந்துள்ளது. ☞2

*170 நாள்களின் பின்னர்*

# சிறை மீண்டு வந்த ரிஷாத்

## 2 வழக்குகளுக்கும் கிடைத்தது பிணை



**அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் 170 நாள்களின் பின்னர் இன்று பிணையில் விடுவிக்கப்பட்டார்.** ☞2

## மேலும் 81 பேர் சிக்கினார்கள்

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 81 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் இன்று விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கமைவாக தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 790ஆக அதிகரித்துள்ளது. ☞2

## வாய்க்குப் பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு

வாய்க்குப் பிளாஸ்டர் ஒட்டப்பட்ட நிலையில், ஆண் ஒருவரின் சடலத்தைப் பொலிஸார் மீட்டுள்ளனர்.


கேகாலை மாவட்டம், வரக்காபொல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட துல்கிரிய, மாஓயாவுக்கு அருகிலிருந்தே குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடுகம, அரத்தன பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர், பன்னல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும், இவரைக் கடந்த 10ஆம் திகதி முதல் காணவில்லை என்று அவரது மனைவி ☞2

# கஹவத்தையில் தமிழர்கள் மீது சிங்களவர்கள் கடும் தாக்குதல்!

## சொத்துகளுக்கும் சேதம்; நால்வர் படுகாயம்



கஹவத்தை, வட்டாபத்தை தோட்டத்தில் நேற்றிரவு தமிழர்கள் மீது சிங்களவர்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வர் கஹவத்தை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளை ☞2

# கைதான 23 இந்திய மீனவர்கள் காரைநகர் கடற்படை முகாமில்



யாழ்., வடமராட்சி கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைதுசெய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 23 பேரும் காரைநகர் கடற்படை முகாமுக்கு ☞2

## கைது செய்யப்பட்ட .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்த வழக்கு இன்று வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, சந்தேக நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள் ளது.

சதொச நிறுவனத்தின் நான்கு அதி காரிகளும் சம்பவத்தில் தொடர்புபட்ட தாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள வர்த்த கரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள னர்.

மோசடியாக விற்பனை செய்யப்பட்ட 54 ஆயிரம் கிரோ கிராம் வெள்ளைப் பூண்டு தொகை கடந்த செப்டெம்பர் மாதம் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் களான நான்கு அதிகாரிகளும் சதொச நிறுவனத்தில் இருந்து இடைநிறுத்தப்பட் டுள்ளனர்.

## கைதான .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாற்றப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் வடமராட்சிக்கு நெருக்கமாக மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர் என கடற்படை பேச்சாளர் இந்திக்க டி சில்வா தெரிவித் தார்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் வைத்து அவர்கள் நேற்றிரவு கைதுசெய் யப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட் டார்.

இதன்போது, அவர்கள் பயணித்த இரண்டு படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் கடற்ப டைப் பேச்சாளர் கூறினார்.

கைதானவர்கள், காங்கேசன்துறை துறைமுகத்துக்குக் கொண்டு வரப்பட்டு பின்னர் காரைநகர் கடற்படை முகா முக்கு மாற்றப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் இரண்டும் மயிலிட்டி துறைமு கத்தில் கட்டப்பட்டுள்ளன.

கைதான மீனவர்களுக்கு மேற் கொள்ளப்படவுள்ள அன்டிஜன் பரிசோத னையின் பின்னரேயே அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைதான மீனவர்களுக்கு எதிராக இரண்டு வாரங்களின் பின்னர் அறிக்கை நீதிமன்றில் தாக்கல் செய்யப்படும் என்று நீரியல் வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்திய மீனவர்களின் தொடர் அத்து மீறலைக் கண்டித்து எதிர்வரும் 17ஆம் திகதி கடலில் இறங்கிப் போராட்டம் நடத்த கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறை மீண்டு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான குற்றச்சாட்டு மற்றும் மலை யக சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர் பான வழக்கு ஆகியவற்றில் இருந்து ரிஷாத் பதியுதீனுக்கு பிணை வழங்கப் பட்டது.

ரிஷாத் பதியுதீன் கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி அதிகாலை 1.30 மணி யளவில் கொழும்பு, பௌத்தலோக மாவத்தையிலுள்ள அவரது வீட்டில் வைத்து பயங்கரவாதத் தடைச் சட்டத் தின் கீழ் கைதுசெய்யப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில், கோட்டை நீதிவான் பிணை வழங்கினார்.

தலா 50 லட்சம் பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளின் கீழ் பிணை வழங்க நீதிவான் உத்தரவிட்டார்.

இதன்போது, ரிஷாத் பதியுதீனுக்கு வெளிநாட்டுப் பயணத் தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

பிணை வழங்கப்பட்ட பின்னர் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராக வேண்டும் என்றும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

## நீரில் மூழ்கி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மரணம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளனர்.

## அரச புலனாய்வு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலனாய்வாளர்கள் மூலமாக நினை வேந்தலில் கலந்துகொண்டவர்களை அச்சுறுத்துவது தொடர்பாகவும் சிறிதரன் எம்.பி. எடுத்துரைத்தார்.

இதேவேளை, அரசு பாரிய விழாக் களை எந்தவிதத் தடைகளும் இன்றி நடத் துவது குறித்தும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் அரச புலனாய்வாளர்களின் அச்சுறுத்தலாலும், தமிழ் இளைஞர் களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பதில் உள்ள பின்னடைவாலும் இலங்கையில் வடபகுதியில் உள்ள தமிழ் இளைஞர்கள் நாட்டை விட்டு வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் தொல்பொருள் என்ற போர் வையில் தமிழர்களின் பூர்வீக நிலங்கள் அபகரிக்கப்படுகின்றமை தொடர்பாகவும், தமிழர்களின் பூர்வீக அடையாளங்களை அழித்து பௌத்த சிங்கள அடையாளங் களைத் திணிப்பது தொடர்பாகவும் இதன் போது சிறிதரன் எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, மாகாண சபைகளினு டைய அதிகாரத்துக்குள் இருக்கின்ற பாட சாலைகள், வைத்தியசாலைகளின் அதி காரங்கள் பறிக்கப்படுகின்றன என்றும், வெளியில் காணி அதிகாரம், பொலிஸ் அதிகாரம் மட்டும் பேசிக்கொண்டு இருக் கும்போது இருக்கின்ற அதிகாரங்களை யும் இலங்கை அரசு மாகாணங்களிடம் இருந்து பறித்துக்கொண்டு இருக்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

இதுவரை மாகாண அரசின் அதி காரத்துக்குட்பட்ட வடக்கு மாகணங்களில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் கட்டுப்பாடுகளை இலங்கை அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்திருப்ப துடன் மாகாண பாடசாலைகளைத் தேசிய பாடசாலைகளாக ஆக்குவதன் ஊடாகவும் தமிழர்களின் அதிகாரம் பறிக்கப்படுகின்றது எனவும் கனேடியத் தூதுவருக்குச் சிறிதரன் எம்.பி. தெரியப் படுத்தினார்.

கனேடிய தேசிய விழாவில் தமிழில் தேசிய கீதம் இசைக்கப்பட்டதற்கும், ஜெனிவா தீர்மானங்களில் கனேடிய அரசு மேற்கொண்டுவரும் ஒத்துழைப்பு களுக்கும் கனேடிய அரசுக்கு சிறிதரன் எம்.பி. நன்றி தெரிவித்தார்.

கனேடிய அரசு மனிதாபிமானத்து டனும் பக்கச்சார்பு இன்றியும் தொடர்ந் தும் செயற்படும் எனவும், ஜெனிவா தீர் மானங்களுக்கு கனேடிய அரசு ஒத் துழைப்புத் தரும் எனவும் கனேடியத் தூதுவர் டேவிட் மக்கினான் வழங்கிய உறுதிமொழியோடு கலந்துரையாடல் சுமுகமாக நிறைவடைந்தது.

## இராணுவச் சிப்பாய் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்போது காயமடைந்த அந்த நபர், அங்கிருந்தவர்களால் கராப்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போது, அவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த நபர் வட்டிக்குப் பணம் கொடுப்பவர் என்று ஆரம்பகட்ட விசார ணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின் றனர்.

## மேலும் 81 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 இடங்களில் நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த 145 வாகனங்களில் வந்த 337 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ள னர்.

## வாய்க்குப் பிளாஸ்டர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பன்னல பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்திருந்தார் என்றும் விசாரணை களில் தெரியவந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக கேகாலை வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நபரின் மரணத்தில் சந்தேகம் நிலவுவதால் பொலிஸார் பல கோணங் களில் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கஹவத்தையில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர்கள் குழுவே தோட்டத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளது எனவும், சொத்துகளுக்குச் சேதம் விளைவிக்கப் பட்டுள்ளது எனவும் அவர்கள் கூறியுள்ள னர்.

வட்டாபத்தை தோட்டத்தில் தமிழ் இளைஞர் ஒருவர், 'ஒட்டோ கெரேச்' ஒன்றை நடத்திவந்துள்ளார். அங்கு மற் றுமொரு தமிழ் இளைஞரும் பணிபுரிந் துள்ளார். குறித்த இளைஞர் நேற்றிரவு உணவு வாங்குவதற்குச் சென்றுள்ளார்.

இதன்போது அவரை வழிமறிந்து பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் தகராறு செய்துள்ள னர். இதனால் வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள் ளது.

அதன்பின்னர் இரவு 9 மணியளவில் தோட்டத்துக்கு வந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஓட்டோ கெரேஜ் உரிமையாளரையும், அங்கு வேலை செய்தவரையும் அப்பகுதி யில் இருந்த ஏனைய சிலரையும் தாக்கியுள்ளனர்.

ஓட்டோக்கள் மற்றும் மோட்டார் சைக் கிள்களுக்கும் சேதம் விளைவிக்கப்பட் டுள்ளது. இதனால் வட்டாபத்தை பகுதி யில் நேற்றிரவு கடும் பதற்றம் நிலவியது. இரவு பொலிஸாரும் வந்து விசாரணை களை நடத்தியுள்ளனர். இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின் றன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

அமெரிக்க லொத்தர் வீசா DV-2023

அமெரிக்காவில் நிரந்தர குடியுரிமை பெறுவதற்கான வீசா விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.
18 வயதிற்கு மேற்பட்ட எவரும் விண்ணப்பிக்கலாம்.
பிரதான விண்ணப்பதாரிக்கு கடவுச்சீட்டு அவசியம்.
அமெரிக்க லொத்தர் வீசா சேவையில் கடந்த 22 வருடகாலத்தில் எம்மூடாக விண்ணப்பித்த 1000ற்கு மேற்பட்டவர்கள் தற்போது நிரந்தரமாக அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.
தெரிவு செய்யப்படும் அதிஷ்டசாலிகளுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல் அனைத்தும் எம்மால் மேற்கொள்ளப்படும்.

முடிவுத்திகதி - 09.11.2021

குறிப்பு : இறுதிநேர நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு கடைசிவரை காத்திராது இன்றே விண்ணப்பியுங்கள்.



தொடர்புகளுக்கு
அருள் வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

இல.01, தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
இல.01, பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.
076 4431 576
இல.10, இ.போ.ச பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.
இல.09, அருள் ஜீவல்லரி புதிய மாநகர சபை கட்டடத்தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## சீரழியும் கல்வித்துறை

நாட்டின் கல்வித்துறை மிகவும் மோசமான பாதிப்புக் கட்டத்தை – பின்னடைவை – எட்டியுள்ளது. ஆனால் அதற்குப் பொறுப்பான தரப்புக்கள் எவையும் அது குறித்து சிரத்தை எடுக்கவே இல்லை என விசனம் தெரிவித்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

நாட்டின் இலவசக் கல்விக்கு தந்தை எனப் போற்றப்படும் சி.டபிள்யூ.டபிள்யூ.கன்னங்கராவின் 137 ஆவது ஜெயந்தி நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இப்படி விசனம் தெரிவித்தார்.

கல்வித் துறையோடு சம்பந்தப்பட்ட தரப்புக்கள், பொறுப்புள்ள வழிகாட்டிகள் தங்கள் பிரச்சினைகள் வேறுபாடுகளை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, முதலில் மாணவர்களின் கல்விப் பிரச்சினைக்கு – நெருக்கடிக்கு – விரைந்து தீர்வு காண்பதற்கு முன்வர வேண்டும் என அவர் அழைப்பு விடுத்தார்.

"அடுத்த தலைமுறையைக் கட்டி எழுப்பாமல் நாடு தன்னைக் கட்டி எழுப்ப இயலாது. அடுத்த தலைமுறைக்கு உரிய கல்வியை வழங்காமல் தலைமுறையை கட்டியெழுப்புவது– மேம்படுத்துவது – இயலாத காரியம். ஆகையால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள கல்வித்துறை நெருக்கடியை அடையாளம் கண்டு, அதனைக் களைவதற்கு காரிய சாத்தியமாகும் முயற்சிகளை எடுக்க முன் வராவிட்டால் இந்தப் பின்னடைவில் இருந்து நாடு மீண்டெழ முடியாது" – என்று அவர் கூறினார்.

கொரோனாத் தொற்று நெருக்கடி காரணமாக சுமார் ஒன்றரை வருடங்களாகப் பாடசாலைக் கல்வித்துறை படுத்துவிட்டது. பாடசாலைகள் திறக்கப்படவில்லை. பாடசாலைகளில் வகுப்பறை கற்றல் – கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

வகுப்பறைகளில் மாணவர்கள் ஒன்று கூட முடியாது என்ற இக்கட்டுக் காரணமாக மாற்றுக் கல்விமுறை குறித்து சிந்திக்கப்பட்டாலும், அதுவும் சரிவர முன்னேற்றம் காணப்படவில்லை. தொலைக் கல்வி முறைமை குறித்து அதிகம் பிரஸ்தாபிக்கபட்டது. ஆனால் அதற்கான உரிய வளங்கள் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவில்லை. இணைய இணைப்பு, கைத்தொலைபேசி வசதி, ஆசிரியர்கள் அத்தகைய வகுப்புகளை நடத்துவதற்கான ஒழுங்கு ஏற்பாடுகள் என எவையுமே முறையாகச் செய்யப்படவில்லை.

ஆரவார அறிவிப்புகள், அறிக்கைகளுடன் அந்தத் தொலைக்கல்வி முறைமையும் நிரந்தரமாக படுத்துவிட்டது.

தொலைக்காட்சி ஊடாக வகுப்பறை கல்வி என்ற திட்டமும் 'ஒப்புக்குச் சப்பாணி' என்ற முறையில் ஆங்காங்கே நடைபெற்றதே தவிர, கல்வியை இழந்து வீட்டில் முடங்கிக் கிடக்கும் மாணவர்களை அத்துறையில் இணைப்பதற்கு பயனுள்ளதாக நகரவே இல்லை.

இதற்கிடையில் 'பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக' கொரோனாத் தொற்றால் ஒன்றரை வருடங்களுக்கு மேல் கல்வியை இழந்து நிற்கும் மாணவர்களின் கல்வித் தாகத்தை, சமய சந்தர்ப்பம் பார்த்துக் காய் நகர்த்தி நிற்கும் அதிபர், ஆசிரியர்களின் தொழிற் சங்கங்கள் தமது தொழிற்சங்க நடவடிக்கை மூலம் முற்றாக நாசமாக்கி நிற்கின்றன.

வகுப்பறைக் கல்விப் போதனையை நிறுத்திய பின்னும் சுமார் ஒன்றரை வருடங்களுக்கு மேல் மாதாந்தம் வீட்டிலிருந்தபடி சுளையாக சம்பளம் பெற்ற ஆசிரியர்களும், அதிபர்களும் மாணவர்களின் கல்விப் போதனை மீள ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் தங்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்பட்டால் மட்டுமே அது சாத்தியம் என்று நிபந்தனை விதித்துள்ளனர். அதன் மூலம் தங்களின் ஆசிரியத் துறையின் மேன்மையை நடுச் சந்தியில் கொண்டு வந்து நிறுத்தி இருக்கின்றார்கள்.

அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களின் இத்தகைய 'தவிச்ச முயல் அடிக்கும்' முயற்சி அவர்களுக்கு, அவர்கள் எதிர்பார்த்த சம்பள உயர்வை பெற்றுத் தருகின்றதோ, இல்லையோ ஆசிரியத்துவம் மீதான காலாதிகால மரியாதை – தெய்வத்திற்கு அடுத்த நிலையில் வைத்து மதிக்கப்படும் மாண்பை – இழக்க வைத்துள்ளது என்பது மட்டும் உண்மை.



## இந்தியக் கடற்றொழிலாளர்கள் விவகாரம்; அமைச்சர் டக்ளஸின் நிலைமை புரிகிறது

### சுப்பிரமணியம் சுவாமி தெரிவிப்பு

இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் நிலைப்பாட்டை புரிந்து கொள்கிறேன் என இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிர மணியம் சுவாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் இந்திய அரச தலைவர்களுக்கு தெளிவுபடுத்தவுள்ளேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணியன் சுவாமி, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, இந்தியக் கடற்றொழிலாளர்களின் விவகாரம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது, எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோதத் தொழில் முறைகள் அனைத்தும் நிறுத்தப்பட வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டின் அவசியம் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் சுப்பிரமணியம் சுவாமிக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

இந்திய கடற்றொழிலாளர்களின் சட்ட விரோதச் செயற்பாடுகளால் இலங்கையின் வட பகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஏற்பட்டு வருகின்ற பாதிப்புக்களைத் தன்னால் புரிந்து கொள்ளக் கூடியதாக இருப்பதாக தெரிவித்துள்ள சுப்பிரமணியம் சுவாமி, கடல் வளங்களை அழிக்கின்ற ட்ரோலர் தொழில் முறை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற தன்னுடைய நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தினார். மேலும், இந்த விடயம் தொடர்பாக இந்திய மாநிலங்களவையில் உரையாற்றவுள்ளேன் எனவும், இந்தியத் தலைவர்களுக்கு தெளிவுபடுத்தி விரைவான தீர்வுக்கு முயற்சிகவுள்ளோம் எனவும் உறுதியளித்துள்ளார்.

## மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை விரைவில் நீங்கும்!

### ஜி.எல்.பீரிஸ் நம்பிக்கை

மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை விரைவில் நீக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

ஒக்ரோபர் 21 ஆம் திகதி வரை தற்போது மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை அமுலில் உள்ளது.

இந்தநிலையில், பயணத்தடையை மேலும் நீடிப்பது தொடர்பாக கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கான செயலணி தீர்மானிக்கும். எனினும் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம், மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடையை நீக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

எனினும் எப்போது தடை நீக்கப்படும் என்று வெளிவிவகார அமைச்சர் குறிப்பிடவில்லை. எவ்வாறிருப்பினும் நாட்டைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

## அரசாங்கம் 'பெயில்' என்பதை நாட்டு மக்களும் ஏற்றுள்ளனர்

### குமார வெல்கம கருத்து



'அரசாங்கம் 'பெயில்' என்பதை மக்களும் ஏற்றுக்கொண்டுவிட்டனர். எனவே, மாகாணசபைத் தேர்தலொன்று நடைபெற்றால் அரசாங்கத்துக்கு தக்க பதிலடி காத்திருக்கின்றது.' - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

சீனா, இந்தியா மற்றும் அமெரிக்காவின் அழுத்தங்களால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகள் வரக்கூடும். முறையற்ற அரச முகாமைத்துவம் காரணமாகவே இந்நிலைமை ஏற்படும்.

நாட்டின் நிர்வாகம் இன்று ஸ்தம்பிதமடைந்துள்ளது. இந்நிலைமையை நான் அன்றே சுட்டிக்காட்டினேன். பிரதேச சபையில்கூட அங்கம் வகிக்காத ஒருவரிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டாம் என வலியுறுத்தியே கட்சியில் இருந்து வெளியேறினேன்.

மாகாணசபைத் தேர்தல் தற்போது அவசியமில்லை. அரசாங்கம் அதனை நடத்தினால் தேர்தலில் போட்டியிடவேண்டிய நிலை எதிர்க்கட்சிகளுக்கு ஏற்படும். அவ்வாறு நடந்தால் அரசாங்கம் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலைதான் ஏற்படும்.

பொருள்களின் விலை உயர்வு உட்பட எல்லாத் துறைகளிலும் பிரச்சினை. இந்த அரசாங்கத்தால் முடியாது என்பதை மக்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆக அரசாங்கம் 'பெயில்' என்பது உறுதியாகியுள்ளது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை எமது நாட்டுக்குத் தேவையில்லை.' - என்றார்.

# இஸ்ரேலில் கண்டுபிடிக்கப்பட்டது மிகப் பழைமையான மதுபான ஆலை



மதுபானம் உற்பத்தி செய்யப்படுவதற்காக 1,500 ஆண்டுகளுக்கு முன்பு பயன்படுத்தப்பட்ட வளாகம் ஒன்றைத் தாங்கள் இஸ்ரேலில் கண்டறிந்துள்ளோம் என தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்த வளாகம் ஒயின் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

டெல் அவிவ் நகரில் இருந்து தெற்கே அமைந்துள்ள யாஃப் எனும் நகரில் பைசன்டைன் பேரரசின் ஆட்சிக் காலத்தில் இயங்கிவந்த இந்த வளாகத்தில், சாறு பிழிவதற்கான ஐந்து கட்டுமானங்கள் மண்ணுக்கடியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்த இடத்தில் ஆண்டுக்கு சுமார் 20 லட்சம் லீற்றர் ஒயின் தயாரிக்கப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மிக நுட்பமான தயாரிப்பு பணிகள் முடிந்த பின்பு, இந்த வைன் மத்திய தரைக்கடல் பகுதியைச் சுற்றியுள்ள பிராந்தியங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

துறைமுகங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு இவை ஐரோப்பா, வடக்கு ஆபிரிக்கா மற்றும் ஆசியா மைனர் பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்த ஒயின் தயாரிப்பு வளாகம் இருக்கும் அளவு தங்களுக்கு மிகவும் வியப்பளிப்பதாக இங்கு பணியாற்றி வரும் தொல்பொருள் ஆய்வாளர்கள் தெரிவிக்கிறார்கள். இந்த இடத்தைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்ட பின்பு இதை சுற்றுலா வாசிகளுக்கு திறந்து விடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வளாகத்தில் சாறு பிழிவதற்கான ஐந்து கட்டுமானங்கள் ஒரு சதுர கிலோ மீற்றருக்கும் அதிகமான பரப்பளவில் இருந்துள்ளன. வைன் மற்றும் போத்தல்களை சேகரிப்பதற்கான சேமிப்பு கிடங்கு, ஒயின் ஊற்றி வைக்கப்பட்டிருந்த மண் ஜாடிகளை உற்பத்தி செய்வதற்கான சூளை ஆகியவையும் இங்கே கண்டறியப்பட்டுள்ளன. இங்கு தயாரிக்கப்பட்ட ஒயின் மதிப்பு மிக்க பழைய ஒயின் ஆவதற்காக காசா ஜாடிகள் என்று அழைக்கப்பட்ட மண் ஜாடிகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன இந்த வளாகத்தில் தயாரிக்கப்பட்டவை காசா ஒயின் மற்றும் ஆஷ்கெலான் ஒயின் என்று அழைக்கப்பட்டுள்ளன.

இந்த ஒயின் மத்தியதரைக் கடல் பிராந்தியம் முழுவதும் இதன் தரத்துக்காக அறியப்பட்டிருந்தது. அதேநேரத்தில் பெரும்பாலானவர்களுக்கு பிரதான பானமாகவும் இது இருந்துள்ளது

ஊட்டச்சத்துக்காக இந்த ஒயின் ஒரு முக்கிய ஆதாரமாக இருந்துள்ளது. இங்கு கிடைத்த நீர் பெரும்பாலும் மாசடைந்து இருந்ததால், ஒயின் குடிப்பது உடல் நலத்துக்குப் பாதுகாப்பானதாக இருந்தது என்று இந்த அகழ்வாராய்ச்சியின் இயக்குநர்களில் ஒருவரான ஜோன் செலிக்மன் தெரிவித்துள்ளார்.

# நோர்வேயில் வில் அம்புகளை எய்து தாக்குதல்; 5 பேர் சாவு



நோர்வேயில் வில் அம்புகளை எய்து மக்கள் மீது தாக்குதல் நடத்தியதில் 5 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து, சம்பவத்தோடு தொடர்புடைய 37 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நோர்வே நாட்டின் தலைநகர் ஒஸ்லோவின் தென்மேற்கில் காங்ஸ்பெர்க் நகரில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

மக்கள் நடமாட்டம் அதிகமாக உள்ள இடத்தில்விஷம், அம்புடன் வந்த மர்ம நபர் மக்களை அம்புகள் எய்தி தாக்கியுள்ளார். மேலும் துப்பாக்கிச் சூடும் நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் 5 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர் என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அத்தோடு, காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடத்தியதற்கான காரணம் குறித்து இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# ஈராக் நாடாளுமன்றத் தேர்தல் சேரோன் இயக்கத்துக்கு வெற்றி

திட்டமிட்டதைவிட ஓராண்டுக்கு முன்னரே நடத்தப்பட்ட ஈராக், நாடாளுமன்ற தேர்தலில் சேரோன் இயக்கம் வெற்றி பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மொத்தமுள்ள 329 நாடாளுமன்ற இடங்களில் இஸ்லாமிய மதகுரு மூக்ததா அல்-சதரின் சேரோன் இயக்கம் 73 இடங்களில் வெற்றி பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

இஸ்லாமிய பிரிவைச் சேர்ந்த முகமது அல்-கல்போசியின் 'தக்கதூம்' கூட்டணி இதுவரை 38 இடங்களில் வென்று இரண்டாம் இடத்தில் உள்ளது. ஈரானுக்கு ஆதரவான பஃடா கூட்டணி வெறும் 14 இடங்கள் மட்டுமே வென்று பின்னடைவைச் சந்தித்துள்ளது.

அல்-சதர் தலைமையிலான கூட்டணி பிற கட்சிகளுடன் பேச்சினை முடித்துக்கொண்டு ஆட்சியமைப்பதற்கு இன்னும் சில வார காலம் ஆகலாம். அவர் இந்தத் தேர்தலில் போட்டியிடவில்லை என்பதால் அல்-சதர் புதிய அரசாங்கத்துக்குத் தலைமை ஏற்க முடியாது.

இதனிடையே ஈராக்கில் உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்கா மற்றும் ஈரானின் தலையீடு இருப்பதை நிறுத்த விரும்பும் அல்-சதர் வெளிநாட்டு தலையீடுகள் எதுவும் இல்லாத புதிய அரசாங்கம் அமைக்கப்படும் என்று உறுதி அளித்துள்ளார்.

2018ஆவது ஆண்டு நடந்த தேர்தலுடன் ஒப்பிடும் பொழுது அல்சத்ரின் கூட்டணி 19 இடங்கள் கூடுதலாக வெற்றி பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட முடிவுகள் தெரிவிக்கின்றன

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேர்தலில் வெறும் 41 சதவீத வாக்காளர்களே வாக்களித்தனர் என அதிகாரப்பூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன.

மதப் பிரிவுகள் மற்றும் இன அடிப்படையிலான அதிகாரப் பகிர்வு என்பது உண்மையில் நடக்காது என்ற ஈராக்கியர்களின் நம்பிக்கையின்மையே பெரும்பாலானவர்கள் தேர்தலில் வாக்களிக்காமல் போனதற்கு காரணமாகப் பார்க்கப்படுகிறது.



# டீக்ரே போராளிகள் மீது எத்தியோப்பிய இராணுவம் தாக்குதல்

தனிநாடு கேட்டுப் போராடி வரும் வடக்கு டீக்ரே போராளிகளைக் குறிவைத்து பல பக்கங்களில் இருந்தும் எத்தியோப்பிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

எறிகணைகள், டாங்குகள், விமானங்கள், ஆளில்லா விமானங்கள் மூலம் தாக்குதல் நடத்தப்படுவதாக போராளிகள் தரப்பில் கூறப்படுகிறது. எனினும் பிராந்தியத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறோம் என டீக்ரே போராளி குழுவைச் சேர்ந்த மூத்த பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். தாக்குதல் குறித்து எத்தியோப்பிய அரசு எதையும் உறுதி செய்யவில்லை. தொலைத் தொடர்பு சேவைகள் துண்டிக்கப்பட்டிருப்பதால் அங்கு என்ன நடக்கிறது என்பதை உறுதி செய்யவும் இயலவில்லை.

கடந்த வாரத்தில் அரசுப் படைகளின் தாக்குதல் தொடங்கியதாகவும் இப்போது முழுவீச்சில் நடைபெற்று வருவதாகவும் டீக்ரே மக்கள் விடுதலை முன்னணி (டி.பி.எல்.எவ்) அமைப்பின் மூத்த உறுப்பினர் கெட்டாசூவ் ரீடா தெரிவித்தார்.

11 மாதங்களாக நீடித்துவரும் இந்த நெருக்கடியால் சுமார் 4 லட்சம் பேர் பஞ்சம் போன்ற சூழலில் வாழ்ந்து வருகின்றன என கடந்த ஜூலை மாதம் ஐக்கிய நாடுகள் சபைகூறியது. இதுவரையிலானசண்டையில்ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர். லட்சக்கணக்கானோர் வேறு இடங்களுக்கு வெளியேறிச் சென்றுவிட்டனர்

# திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் அதானி குழுமத்தின் நிர்வாகத்துக்கு வந்தது




திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையத்தின் இயக்கம் மற்றும் நிர்வாகத்துக்கு அதானி குழுமம் முறையாகப் பொறுப்பேற்றுள்ளது.

இந்திய விமான நிலைய ஆணையம் மற்றும் அகமதாபாத்தை தளமாகக் கொண்ட அதானி குழுமத்தின் உயர் அதிகாரிகள் இன்று அதிகாலையில் விமான நிலையத்தில் நடைபெற்ற பொறுப்பேற்பு விழாவில் கலந்து கொண்டனர்.

அதானி எண்டர்பிரைசஸ் லிமிடெட் நிறுவனத்தின் அதானி திருவனந்தபுரம் சர்வதேச விமான நிலையம் இப்போது இந்திய விமான நிலைய ஆணையத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்தின்படி 50 வருட காலத்திற்கு விமான நிலையத்தை இயக்கவும், நிர்வகிக்கவும் மற்றும் மேம்படுத்தும் பணிகளையும் அதானி நிறுவனம் செய்யும்.

ஏற்கெனவே திருவனந்தபுரம் மாவட்டத்தில், 7,525 கோடிரூபாமதிப்பிலானவிழிஞம்சர்வதேசதுறைமுகத்தை உருவாக்கிவரும் அதானி குழுமம், பெப்ரவரி 2019 இல் நடைபெற்ற 89 ஆண்டுகள் பழமையான திருவனந்தபுரம் விமான நிலையத்தின் ஏலத்தில் வெற்றி பெற்றது. கேரள அரசு நடத்தும் கேரள மாநில தொழில் துறை மேம்பாட்டுக் கழகம் மற்றும் ஜி.எம்.ஆர். குழுமம் ஆகியவை இந்த ஏலத்தில் போட்டியிட்ட ஏனைய முக்கிய நிறுவனங்களாகும்.

கடந்த ஆண்டு ஓகஸ்டில், கேரள சட்டசபை ஏகமனதாக விமான நிலைய தனியார்மயத்தை எதிர்த்து தீர்மானம் நிறைவேற்றியது. கேரள அரசின் ஆட்சேபனைகளைப் புறக்கணித்து விமான நிலையத்தை அதானி குழுமத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான முடிவை மத்திய அரசு எடுத்தது. இந்த முடிவுக்கு தடைகோரி கேரள அரசு, கேரள உயர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில், தற்போது இந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.



# காஷ்மீர் ஒருபோதும் பாகிஸ்தானின் அங்கமாகாது முன்னாள் முதல்வர் பரூக் அப்துல்லா திட்டவட்டம்

காஷ்மீர் ஒருபோதும் பாகிஸ்தானின் அங்கமாகாது என்று அதன் முன்னாள் முதலமைச்சரான பரூக் அப்துல்லா தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீநகரில் சமீபத்தில் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்ட பாடசாலை அதிபரின் குடும்பத்தினரை நேற்று சந்தித்து பரூக் அப்துல்லா ஆறுதல் தெரிவித்தார். அதன்பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது, 'காஷ்மீர் ஒருபோதும் பாகிஸ்தானின் அங்கமாகாது. இதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். காஷ்மீர், எப்போதும் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியாகவே இருக்கும். அவர்கள் என்னைச் சுட்டுத்தள்ளினாலும் இதை மாற்றமுடியாது. நாம் அனைவரும் ஒன்றுபட்டு அவர்களை எதிர்த்து தைரியத்துடன் போராடவேண்டும். பயப்படக்கூடாது. இளம் மாணவர்களுக்கு பாடம் நடத்திய ஆசிரியரைக் கொல்வது இஸ்லாமிய மதத்துக்கு சேவை செய்வது ஆகாது.

ஒரு புயல் இந்த நாட்டில் உருவாகிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள், சீக்கியர்கள், இந்துக்கள் பிளவுபடுத்தப்படுகிறார்கள். இந்தப் பிரிவினை அரசியலை நிறுத்திக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் இந்தியா பிழைக்காது அல்லது இருக்காது. இந்தியா காப்பாற்றப்படவேண்டுமானால், நாம் அனைவரும் கரம் கோர்க்க வேண்டும். அப்போதுதான் இந்தியா வளம்பெறும், என்று அவர் கூறியிருக்கிறார்.

# தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அமைச்சருக்குக் கொரோனா உறுதி



தெலுங்கானாவில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட அமைச்சர் ஒருவருக்குக் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது.

தெலுங்கானாவில் பிற்பட்டோர் நலத்துறை, உணவு, நுகர்பொருள் விநியோகத்துறை அமைச்சராகவுள்ள கங்குல கமலேக்கர், இடைத்தேர்தல் நடக்கவுள்ள ஹுசூராபாத் தொகுதியில் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தார். அப்போது காய்ச்சலால் அவதிப்பட்ட அவருக்கு பரிசோதனை செய்யப்பட்டதில் கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ளது.

இதையடுத்து அவர் தன்னை வீட்டிலேயே தனிமைப்படுத்திக்கொண்டார். இதுகுறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், தன்னோடு அண்மைய நாள்களில் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் கொரோனாப் பரிசோதனை செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.



# நிலக்கரி கையிருப்பு அதிகரித்து வருகிறது மத்திய நிலக்கரித் துறை அமைச்சர் தகவல்



மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில் பிரச்சினை இருக்காது என இந்திய நிலக்கரித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

சத்தீஷ்கார் மாநிலம் கோர்பா மாவட்டத்தில் மூன்று நிலக்கரிச் சுரங்கங்களில் நிலக்கரி உற்பத்தியை பார்வையிடுவதற்காக நிலக்கரித் துறை அமைச்சர் பிரகலாத் ஜோஷி பிலாஸ்பூருக்குச் சென்றார்.

அங்கு அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், நிலக்கரிப் பிரச்சினையில் நான் அரசியல் செய்ய விரும்பவில்லை. மின்சார உற்பத்திக்கு இன்றைய தேவை 11 லட்சம் தொன் நிலக்கரி. ஆனால், நாங்கள் 20 லட்சம் தொன் நிலக்கரியை விநியோகித்து இருக்கிறோம். இதனால், நிலக்கரிக் கையிருப்பும் அதிகரித்து வருகிறது. எனவே, மின்சார உற்பத்திக்குத் தேவையான நிலக்கரி கிடைப்பதில் பிரச்சினை இருக்காது.

அனல்மின் உற்பத்தி நிலையங்களுக்கு நாள் ஒன்றுக்கு 19 லட்சம் தொன் நிலக்கரியும், 20 ஆம் திகதிக்குப் பின்னர் நாள் ஒன்றுக்கு 20 லட்சம் தொன் நிலக்கரியும் விநியோகிக்குமாறு மத்திய மின்துறை அமைச்சகம் கோரிக்கை வைத்துள்ளது. ஆனால், எங்கள் நிலக்கரி அமைச்சகம் ஒரே நாளில் 20 லட்சம் தொன் நிலக்கரியை விநியோகித்துள்ளது, என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மெல்லிய காற்றிலும் கொரோனா பரவும் அபாயம் அதிகமுள்ளதாக இந்திய ஆய்வில் கண்டுபிடிப்பு

மெல்லிய காற்றிலும் கொரோனா பரவும் அபாயம் உள்ளதாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

கொரோனா வைரஸ் தொற்று பற்றிய ஆய்வுகள் பல நாடுகளிலும் தொடருகின்றன. மும்பை ஐ.ஐ.டி. ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், கொரோனாத் தொற்று உள்ள ஒருவர் பொது இடத்தில் இருமுகிறபோது அதே திசையில் மெல்லிய காற்று வீசினால் அது கொரோனாத் தொற்றை விரைவாகப் பரப்பும் எனக் கண்டறிந்துள்ளனர்.

இதுபற்றி குறித்த ஆய்வில் ஈடுபட்ட குழுவின் சார்பில் ஆய்வாளர் அமித் அகர்வால் தெரிவிக்கும்போது, 'எங்கள் ஆய்வு முடிவுகளின் அடிப்படையில், வீட்டுக்கு வெளியே வந்துவிட்டாலே முகக்கவசங்கள் அணிந்துகொள்ள வேண்டியது அவசியம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, மெல்லிய காற்று வீசுகிற சூழலில் கண்டிப்பாக முகக்கவசம் அணியவேண்டும்!' என வலியுறுத்தியிருக்கிறார்.



# எமது சமூகத்துக்கு அரசியல் ரீதியாக ஒரு விழிப்புணர்வு இருக்க வேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவிப்பு

இன்று எமது சமூகத்தை பொறுத்த வரையிலே அரசியல் ரீதியாக ஒரு விழிப்புணர்வு இருக்கவேண்டும். ஏனென்றால் இனிமேல் எதிர்காலம் என்பது வெறுமனே பாதைகள் புனரமைப்பு மற்றும் ஆலயங்களை புனரமைப்பதோ அல்ல. இந்த நாட்டிலேயே தமிழர்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழ்நிலை அமைய வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

விசேடமாக மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசசெயலாளர் பிரிவில் எங்களுடைய விடுதலைப் போராட்டத்தோடு தொடர்புள்ளவர்கள் அதிகளவானோர் காணப்படுகின்றனர். அதிகளவான மாவீரர்கள் காணப்படுகின்றார்கள். அவர்கள் அவர்களுடைய உயிரை அர்ப்பணித்தது இந்த ஆலய புனரமைப்புக்கோ வீதி புனரமைப்புக்கோ அல்ல. தங்களுடைய வாழ்க்கையை அர்ப்பணித்ததற்கான காரணம் எங்களுடைய இனத்தின் விடுதலைக்காக. அது எங்களுடைய ஒருபோராட்டத்தின் ஒரு வடிவமாக இருந்தது ஆயுதப்போராட்டம்.

2009ஆம் ஆண்டிற்கு பிற்பாடு எமது போராட்டத்தை அரசியல் ரீதியாக முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றோம். ஆனால் அப்படியான அரசியல் உரிமைகளைப் பற்றி பேசுபவர்கள் இன்று அரசாங்கம் தொடர்ந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றது. இன்று வரைக்கும் எமது மாவட்டத்தில் பல இளைஞர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் செய்த தவறு என்ன முகநூலில் விடுதலைப் புலிகள் தொடர்பான பதிவுகளை செய்தது என்கின்ற காரணத்திற்காக அவர்களைசிறையில்வைத்து இருக்கின்றார்கள்.

வரும்காலங்களில்விடுதலைப்போராட்டம் மௌனிக்கப்பட்டது என்பதற்காக எங்களுடைய தமிழ் மக்களுடைய அரசியல் ரீதியான போராட்டம் மௌனிக்கப்படவில்லை. எங்களுடைய அரசியல் உரிமைகளுக்காக தொடர்ந்து போராட வேண்டும் என்றார்.

# ரிஷாத்திடம் மீட்கப்பட்டது கையடக்கத் தொலைபேசி

## மீண்டும் சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலை

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனிடமிருந்து கையடக்கத் தொலைபேசி கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பாக அவர் மீண்டும் சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார். இந்த விடயம் தொடர்பாக சிறைச்சாலைகள் பேச்சாளர் சிறைச்சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

சம்பவத்தில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், தொலைக்காணொலி தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று சிறைச்சாலை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தார்.

இதன்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை எதிர்வரும் 24 ஆம் திகதி சிறைச்சாலை நீதிமன்றில் மீண்டும் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



# கடற்கரையில் ரி 56 ரகத் துப்பாக்கி மீட்பு

மட்டக்களப்பு, கல்லடி திருச்செந்தூர் கடற்கரையில் ரி 56 ரகத் துப்பாக்கியொன்று, நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளதாக, காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

திருச்செந்தூர் கடலில் கரை வலை மீன்பிடியில் அப்பகுதி மீனவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது, வலையில் குறித்த துப்பாக்கி சிக்கியுள்ளது.

அது தொடர்பில், காத்தான்குடி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதையடுத்து, அந்த இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பொலிஸார் துப்பாக்கியை மீட்டுள்ளனர். இது தொடர்பாக காத்தான் குடி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# அம்பாறை திருக்கோவில் பிரதேசத்துக்கு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ நேற்று விஜயம்

திருக்கோவில் பிரதேசத்திற்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ விஜயம் செய்துள்ளார்.

இதன்போது திருக்கோவில் உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்கான 15 லட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட கரப்பந்தாட்ட மைதானம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளதுடன், விளையாட்டுத் துறையை வலுப்படுத்தி சர்வதேச ரீதியாக இளைஞர்கள் சாதனைகளை படைப்பதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி கொடுப்பதற்கான செயற்திட்டங்களையும் முன்னெடுத்து வருகிறோம் என அமைச் சர் நாமல் ராஜபக்சஷ இதன்போது கருத்து வெளியிட்டார்.

கொவிட் 19 நோய் தாக்கம் பொருளாதாரம், கல்வி என அனைத்துத் துறைகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ள போதிலும் பல சவால்களுக்கு மத்தியில் நாட்டு மக்களுக்காக அபிவிருத்திகளை முன்னேடுத்து வரும் இதேவேளை, சர்வதேச ரீதியாக பலம் பொருந்திய நாடாக இலங்கையை கட்டியெழுப்புவோம் என விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

# மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் விபத்து; சாரதி காயம்




சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குஉட்பட்டகாரைதீவு பிரதேச மாவடிப்பள்ளி பிரதான வீதியில் மாவடிப்பள்ளி பாலத்திற்கு அருகில் இடம்பெற்றவிபத்தில்ஒருவர் பலத்தகாயங்களுக்குஉள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது. இதன்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த வடி ரக வாகனம் பாலத்தில் மோதுண்டு பலத்த சேதத்திற்கு உள்ளாகி உள்ளதுடன் வாகனத்தின் சாரதி காயமடைந்துள்ளார். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு





## இறுதி ஓவரில் டெல்லி கப்பிட்டல்ஸை வீழ்த்தி

# இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி

ஐ.பி.எல். தொடரின் இறுதிப்போட்டிக்கான இரண்டாவது தகுதிகாண் போட்டியில், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி, டெல்லி கப்பிட்டல்ஸ் அணியை 3 விக்கெட்டுக்கள் ளால் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சார்ஜாவில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பை மேற் கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட டெல்லி கபிட்டல்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 135 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சிகர் தவான் 36 ஓட்டங்களையும் ஸ்ரேயஸ் ஐயர் ஆட்டமிழக்காது 30 ஓட்டங்களையும் எடுத்தனர். கொல்கத்தா அணியின் வருண் சக்கரவர்த்தி 2 விக்கெட்டுக்களையும் லோக்கி பெர்குசன் மற்றும் சிவம் மாவி ஆகியோர் தலா 1 விக் கெட்டினையும் வீழ்த்தினர். இதனைத்தொடர்ந்து களமிறங்கிய கொல்கத்தா அணி 19.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்து இறுதிப் போட்டிக்குள்ளும் நுழைந்தது. வெங்கடேஷ் ஐயர் 55 ஓட்டங்களையும் சுப்மன் கில் 46 ஓட்டங்களையும் சேர்த்திருந்தனர். டெல்லி அணியின் அன்ரிச் நோர்ட்ஜே, ரபாடா மற்றும் அஸ்வின் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக வெங்கடேஷ் ஐயர் தெரிவுசெய்யப்பட்டார். இந்த வெற்றியின் மூலம் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள கொல்கத்தா அணி, நாளை டுபாயில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இதுவரை இரு முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ள கொல்கத்தா அணி இரு முறையும் சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. தற்போதைய ஐ.பி.எல். தொடரில் இரண்டு முறை சென்னை அணியை எதிர்கொண்ட கொல்கத்தா அணி இரண்டு போட்டிகளிலுமே தோல்வியைச் சந்தித்துள்ளது. ஆயினும், 2012ஆம் ஆண்டு நடைபெற்ற இறுதிப் போட்டியில், சென்னை அணியை 22 ஓட்டங்களால் வெற்றிகொண்டு சம்பியன் பட்டத்தை அந்த அணி கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகக் கிண்ணக் கால்பந்தாட்டத் தொடர் தகுதிச்சுற்றில் போர்த்துக்கல்லுக்கு 5ஆவது வெற்றி



உலகக் கிண்ணக் கால்பந்தாட் டத் தொடரின் தகுதிச்சுற்றின் ஐரோப்பிய பிரிவில் போர்த்துக்கல் 5-0 என்ற கோல் கணக்கில் லக்ஸம்பேர்க்கை வீழ்த்தியது. இத் துடன் 6 ஆட்டங்களில் 5 வெற்றி களைப் பதிவு செய்துள்ள போர்த் துக்கல், பிரிவு ‘ஏ’-யில் 16 புள்ளி களுடன் 2 ஆவது இடத்தில் இருக் கிறது.

லக்ஸம்பேர்க் அதே எண்ணிக் கையிலான ஆட்டங்களில் 2 வெற்றிகள் பெற்று 6 புள்ளிகளுடன் 3 ஆவது இடத்தில் இருக்கிறது.

போர்த்துக்கல்லின்அல்மான்சில் நகரில் நடைபெற்ற போட்டியில் கிறிஸ்டியானோ ரொனால்டோ 8, 13, 87 ஆகிய நிமிடங்களில் கோல் களையடித்தார். இதில் முதலிரு கோல்கள் பெனால்டி கிக் வாய்ப்பில் அடிக்கப்பட்டன.

அவர் தவிர புருனோ ஃபொனாண்டஸ்17 ஆவதுநிமிடத்தி லும், ஜாவ் பாலின்ஹா 69 ஆவது நிமிடத்திலும் கோல்களை அடித் தனர்.



## டிக்வெல்ல, மெண்டிஸ், குணதிலக்கவுக்கு உள்ளூர் போட்டிகளில் விளையாட அனுமதி

இலங்கை கிரிக்கெட் வீரர்களான குசல் மெண்டிஸ், நிரோஷன் டிக்வெல்ல மற்றும் தனுஷ்க குணதிலக்க ஆகியோருக்கு விதிக் கப்பட்டிருந்த தடைகளில், உள்ளூர் போட் டிகளில் விளையாடுவதற்கான தடையை நீக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மா னித்துள்ளது. கடந்த ஜூலை மாதம் நடை பெற்ற இங்கிலாந்து தொடரின்போது கொரோனாபாதுகாப்புவலயவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டுக்காக இவர்கள் மூவருக்கும் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு ஒருவருடமும், உள்ளூர் போட்டிகளில் விளையாட 6 மாதங்களும் தடைகளும் அபராதமும் விதிக்கப்பட்டன.


உள்ளூர்போட்டிகளில்விளையாடுவதற்கு அவர்களுக்கு விதிக்கப்பட்ட தடை எதிர்வரும் டிசெம்பர் மாதம்தான் நிறைவுக்கு வரும் என்ற நிலையில், குறித்த காலப்பகுதிக்கு முன்னர் தடையை நீக்குவதற்கு இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது. இந்தத்தீர்மானம், இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமைத் துவ உறுப்பினர்களுக்கு இடையில் இடம் பெற்ற சந்திப்பின்போது மேற்கொள்ளப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.




## இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய சீருடை அறிமுகம்

ரி-20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் விளையாடவுள்ள இந்திய அணியின் சீருடை வடிவம் மாற்றப்பட்டுள்ளது. இந்தத் தொடர், ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் இம் மாதம் 17 ஆம் திகதி முதல் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் இந்திய அணி அணிந்து விளையா டவுள்ள புதிய சீருடையை இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை இன்று அறிமுகம் செய்துள்ளது.

கடும் நீலநிறத்தில் அமைந்துள்ள இந்தப் புதிய சீருடை, இலங்கைக் கிரிக்கெட் அணியின் சீருடையை ஒத்துள்ளதாக சமூக வலைத்தளங்களில் பலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.



# கலியுக அவதாரம்

# சீரடி சாயி பாபா

கலியுகத்தில் அவதரித்த மகான்களில் முதன்மையானவர் சீரடி சாயி பாபா. அவர் நிகழ்த்திய லீலைகள் அனேகமானவை, அற்புதமானவை. நான் இறந்த பின்பும் கல்லறையிலுள்ள எனது எலும்புகள் நம்பிக்கையும் மனஉறுதியும் அளிக்கும். உருவமோ, அருவமோ அற்ற நான் எனது பக்தனைச் சென்றடைவதற்கு எந்தவித கதவுகளும் தடையாக அமையாது. என்ற உறுதிமொழியை, பாபா சமாதிநிலையிலிருந்து அறிவிக்கின்றார்.

இப்போது உலகமெங்கும் ஆட்டிப்படைக்கும், உயிர்க்கொல்லி நோயான கொரோனா போன்று, கடந்த நூற்றாண்டில் கொலாரா என்ற கொடிய உயிர்க்கொல்லி நோய், இந்தியாவில் பரவியிருந்தது. பல் லாயிரக்கணக்கான உயிர்கள் காவுகொள்ளப்பட்டன. ஆட்சிபுரிந்த ஆங்கிலேயர்கள், நோயைக் கட்டுப்படுத்த, ஒழித்துக்கட்ட முடியாது சிரமப்பட்டார்கள். அந்த இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்தவர்தான் சீரடி சாயிபாபா. சீரடி சமஸ்தானத்துக்குள், அந்த கொடிய நோய் உட்புகுந்தது. சீரடி வாழ் மக்கள் பாதிப்படைந்தார்கள். சீரடி சாயி பாபாவிடம் தஞ்சமடைந்தார்கள். எப்போதாவது, ஏதாவது நோய் ஏற்பட்டால், பாபாவிடம் சென்று, அவரது ஆசியைப் பெற்று, அவரிடம் மருந்தாக மூலிகைகளை, அல்லது உதியை வாங்கிச் சாப்பிட்டு, குணப்படுத்திக் கொள்வது வழக்கம். ஆனால் அந்தக் கொலாரா நோய் சீரடியில் பரவி வந்த நேரத்தில், மக்கள்



பயத்தால், மனவேதனையால் துவண்டுபோனார்கள். பாபா, ஒருநாள் தனது இருப்பிடமான மசூதியில் இருந்துகொண்டு, கோதுமையை எடுத்துவந்து, அரைக்கும்கல்லில் இட்டு, உரக்க சத்தமிட்டு அரைத்து, எதனையோ முனுமுனுத்தபடி, உக்கிரகமாக, ஆவேசமாக காணப்பட்டார். சீரடி மக்கள் அவரைச் சுற்றிக் கூடத் தொடங்கி விட்டார்கள். அந்த நோய் காரணமாக உணவுப்பஞ்சம் வேறு ஏற்பட்டிருந்தது. அதனால் அரைக்கும் அந்தக் கோதுமை மாவை, பாபா தங்களுக்குத்தான் தரவிருப்பதாக நினைத்துக் கொண்டு, அதனைப் பெறுவதற்கு ஆளுக்கு ஆள் முட்டி மோதிக் கொண்டார்கள். பாபா, அவர்களைப் பார்த்து உரக்க, கோபமாகச் சத்தமிட்டார். ஆவேசமாக துள்ளிக்குதித்தார். அந்தக் கோதுமை மாவை, அங்கிருந்த ஒரு சிலரிடம்கொடுத்து, சீரடி சமஸ்தானத்தின் எல்லையைச் சுற்றி, தூவி விசுரும்படிக் கேட்டுக் கொண்டார். கூடியிருந்த மக்களுக்கோ ஏமாற்றம், இவரது இந்தச் செயலைப் பார்த்து பாசாங்கு செய்தார்கள். திட்டத் தொடங்கினார்கள். ஆச்சரியம்! அதிசயம்!! உண்மை!!! கொலாரா நோய் சீரடியை விட்டு ஒழிந்தது. சீரடி வாழ் மக்கள் அனைவரும் காப்பாற்றப்பட்டார்கள். பாபா அந்த நோய் கிருமியை கோதுமையாக, கல்லில் அரைத்து, ஏதோ மந்திரங்களை உச்சரித்து, ஆவேசமான சத்தமிட்டு, துரத்திவிட்டதாக அவரது சத்சரிதம் வரலாற்றில் கூறப்பட்டிருக்கிறது.

அன்று தொட்டு, தன் பக்தர்களைக் காப்பாற்ற, அவரால் உருவாக்கப்பட்ட உதி, சீரடியில் இன்றும் அணையா விளக்காக, நீரூற்றாக நம்பிக்கையின் அடையாளமாக, பல நூற்றாண்டுகள் கடந்து நெருப்புச் சுவாலையாக வளர்ந்து கொண்டிருக்கிறது. அவர் கொடுத்த பொக்கிஷம் ஊதி. பாபாவின் வேத வாக்கு நம்பிக்கை,பொறுமைஎன்பதாகும். இன்றைய இந்த இக்கட்டான காலகட்டத்தில், பாபா மீது வைத்துள்ள பரிசுத்தமான புரண நம்பிக்கை, நம் வாழ்வுக்கு நிச்சயம் கை கொடுக்கும், ஆகவே பொறுமையாக வழிபட்டால், இப்போதுள்ள ஆபத்தான கட்டங்களைக் கூட தாண்டமுடியும். அவரது உதி, சாயி பக்தர்களுக்கு ஒரு மருந்து.

வருகின்ற 15ம் திகதி நாளை விஜயதசமி திதி. சீரடி சாயி பாபா அவதரித்த, மற்றும் மகா சமாதி யடைந்த நன்நாள். கொழும்பு, புதுச்செட்டித் தெருவிலுள்ள, சீரடி சாயி மத்திய நிலையம் ஸ்ரீலங்காவின் ஆதரவில், நான்கு கால ஆராத்திகள், ஆராதனைகள் அனைத்தும், நாட்டின் சுகாதாரக் கட்டுப்பாட்டுக்கு அமைவாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் மிகப் பிரமாண்டமாகக் கட்டப்பட்டு வரும் உயரமான சீரடி இராஜகோபுரம் அடுத்த ஆண்டு, கோலாகலமாக கும்பாபிஷேகத்துடன் திறக்கப்படவுள்ளது.

**எஸ். டி. எஸ். உதய நாயகன்**
**சீரடி சாயி மத்திய நிலையம் ஸ்ரீலங்கா**

# எரிபொருள் விலையை அதிகரிக்கும் தீர்மானம் இதுவரையிலும் இல்லை

## நிதி அமைச்சின் முடிவிற்காக காத்திருப்பு என்கிறார் கம்மன்பில



உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரிப்பை அடுத்து இலங்கையிலும் எரிபொருளுக்கான விலையை அதிகரிக்கக் கோரி ஐ.ஒ.சி. நிறுவனம் மற்றும் இலங்கைபெற்றோலியக்கூட்டுத்தாபனம் ஆகியன அழுத்தம் கொடுக்கின்றன எனவும், நிதி அமைச்சர் இதற்கு நிவாரணம் வழங்காது போனால் எரிபொருள் விலையை அதிகரிக்க நேரிடும் எனவும் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையை அதிகரிக்கும் இறுதித் தீர்மானம் இன்னமும் எடுக்கப் படவில்லை என்றாலும் இந்த வாரத்தில் தீர்மானம் எடுக்க வேண்டும், எனவே நிதி அமைச்சின் முடிவிற்காகக் காத்திருக்கின்றோம் எனவும் அவர் கூறினார்.

நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை அதிகரிப்புக் காரணமாக மக்கள் பாரிய நெருக்கடி நிலைமையை எதிர்கொண்டு வருகின்ற நிலையில் எரிபொருள் விலை அதிகரிக்கப்படுவது தொடர்பாகக் கடந்த சில தினங்களாகக் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

அமைச்சரவையிலும் இது தொடர்பில் கலந்துரையாடியுள்ள நிலையில் இப்போது ஐ.ஒ.சி. நிறுவனம் மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் ஆகியன எரிபொருள் விலையை அதிகரிக்கக்கோரி அழுத்தம் கொடுக்க ஆரம்பித்துள்ளன.

உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் இலங்கையிலும் பெற்றோல் ஒரு லீற்றருக்கு 15 ரூபாவாலும், டீசல் ஒரு லீற்றர் 25 ரூபாவாலும் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்துள்ளனர்.

இது தொடர்பில் வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவிடம் வினவிய போது-

உலக சந்தையில் கனிய எண்ணெயின் விலை துரித அதிகரிப்பை வெளிப்படுத்தியுள்ளது. இலங்கையில் விலை அதிகரிப்பு பற்றி மாத்திரமே ஊடகங்களும், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பேசிக் கொண்டுள்ளனர். ஆனால் உலக சந்தையின் தற்போதைய விலை அதிகரிப்பு தொடர்பாக எவரும் கவனம் செலுத்துவதில்லை. மக்களிடம் உண்மைகளைக் கூறவும் நினைக்கவில்லை. இப்போதுள்ள நிலையில் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு மிகப் பெரிய நட்டம் ஏற்பட்டுள்ளது.

இதேநிலையில் இனியும் பயணிக்க முடியாத நிலை உருவாகியுள்ளது, அரசாங்கம் இதற்கான நிவாரணத் தொகையை ஒதுக்கினால் மட்டுமே இப்போது வழங்கப்படும் விலைக்கு எரிபொருள் வழங்க முடியும். இல்லையேல் நிச்சயமாக விலை அதிகரிப்பை முன்னெடுத்தே ஆக வேண்டும்.

இறுதியாக கூடிய அமைச்சரவைக் கூட்டத்திலும், அதற்கு முன்னர் ஜனாதிபதியின் தலைமையில் விசேடமாககூடியஆலோசனை குழுக் கூட்டத்திலும் எமது தரப்பு நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்துள்ளேன். உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்துள்ளது. ஒரு பீப்பாய் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியவற்றின் விலை 16 ரூபாவால் அதிகரித்துள்ளது.

கப்பல் கட்டணம் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில் பழைய விலையில் இலங்கையில் எரிபொருள் வழங்கினால் மாதம் ஆயிரம் கோடி ரூபா நட்டத்தில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தை கொண்டு செல்ல வேண்டிவரும் என்பதைக் கூறியுள்ளேன். அதேபோல் ஐ.ஒ.சி. நிறுவன அதிகாரிகள் எம்முடன் கலந்துரையாடியிருந்தனர், அவர்கள் எரிபொருள் விலையை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளனர் எனக் கூறப்படுகிறது.

குறிப்பாக பெற்றோல் ஒரு லீற்றருக்கு 15 ரூபாவினாலும், டீசல் ஒரு லீற்றர் 25 ரூபாவாலும் அதிகரிக்க ஆலோசனை முன்வைத்துள்ளனர். அதேபோல் பெற்றோலிய கூட்டுத்தாபனமும் எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

எனவே நிதி அமைச்சரிடம் கோரிக்கைகள் கொண்டு சேர்க்கப்பட்டுள்ளன. நிதி அமைச்சின் ஊடாக நிவாரண தொகை ஒதுக்க வேண்டும், அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இப்போது வரையில் எரிபொருள் விலையை அதிகரிக்கும் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. இந்த வாரத்தில் இதற்கான தீர்மானம் எடுக்க வேண்டும், நிதி அமைச்சின் முடிவிற்காக காத்திருக்கின்றோம். - என்றார்.

# வட்டி விகிதங்கள் தொடர்பில் இலங்கை மத்திய வங்கி அறிவிப்பு

இலங்கை மத்திய வங்கியின் நாணய வாரியம் இன்று (வியாழக்கிழமை) நடைபெற்ற கூட்டத்தில், மத்திய வங்கியின் நிலைப்பு வைப்பு வசதி விகிதம் மற்றும் நிலைப்பு கடன் வசதி விகிதத்தை தற்போதைய நிலைகளில் முறையே 5 சதவீதம் மற்றும் 6 சதவீதமாக பராமரிக்க முடிவு செய்துள்ளது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார நிலைமைகள் மற்றும் எதிர்பார்த்த முன்னேற்றங்களைக் கவனமாகப் பரிசீலித்த பிறகு வாரியம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

வரவிருக்கும் காலத்தில் பொருளாதாரம் அதன் திறனை அடைய உதவுவதோடு, தகுந்த நடவடிக்கைகளுடன் நடுத்தர காலப்பகுதியில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட மட்டத்தில் பணவீக்கத்தை பராமரிப்பதற்கான தனது உறுதிப்பாட்டை வாரியம் மீண்டும் வலியுறுத்தியது.



# இந்திய இராணுவ பிரதானி பாதுகாப்பு செயலர் சந்திப்பு

இந்திய இராணுவ பிரதானி ஜெனரல் மனோஜ் முகுந்த் நாரவனே தலைமையிலான இராணுவ உயர் தூதுக்குழுவிற்கும் பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்னவிற்குமிடையில் நேற்று (புதன்கிழமை) விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பின் போது இருதரப்பு உறவுகள் மற்றும் இராணுவப் பயிற்சி நடவடிக்கை தொடர்பில் சிநேகபூர்வ கலந்துரையாடல் இடம்பெற்றது.

பாதுகாப்பு செயலாளர் மற்றும் இந்திய இராணுவ பிரதானி ஆகியோரின் இந்தச் சந்திப்பை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# வாய் மூடப்பட்ட நிலையில் வரக்காப்பொலவில் சடலம்

சந்தேகத்திற்கு இடமான முறையில் உயிரிழந்த நபர் ஒருவரின் சடலம் ஒன்று வரகாபொல பிரதேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நேற்று மதியம் வரகாபொல துல்ஹிரிய பிரதேசத்தின் மாஓயாவில் இந்தச் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபரின் வாய் பிலாஸ்டர் ஒன்றால் மூடப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்துக்கு அருகில் இருந்து அடையாள அட்டை ஒன்று கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் அதில் பெறப்பட்ட தகவல்களுக்கு அமைய கடந்த சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த நபரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் கடந்த 10 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார் என அவரது மனைவி பன்னல பொலிஸில் முறைப்பாடு ஒன்றைப் பதிவு செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். அதன்படி, காணாமல் போன நபரின் மனைவியால் இந்தச் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. 43 வயதுடைய அரத்தன, உடுகம பிரதேசத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.